சார்பு நீதிமன்றம், மேலூர்

OS No. 273/2023

பெயர் : குடலன்
தகப்பனார் பெயர் :கருத்தப்பயல்
கணவர் பெயர் :
வயது :75
கிராமம் :பொய்கைகரைப்பட்டி கள்ளந்திரி
வட்டம் :மதுரை கிழக்கு
தொழில் :ஓய்வு பெற்ற தலையாரி, பொய்கைகரைபட்டி

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

12.03.2026

வா.சா.1 முதல் விசாரணை:

நான் இந்த வழக்கில் வாதி. என்னுடைய முதல் விசாரணையை எழுத்து வடிவ பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் கண்ட சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டது தான். அதில் கண்ட சங்கதிகளை எல்லாம் படித்து பார்த்து தான் கையெழுத்து செய்தேன். கடந்த 25.01.2022 அன்று இந்த வழக்கின் பிரதிவாதியான சின்னையாவிற்கு 1,50000/- ரூபாய் ரொக்கமாக கொடுத்தேன் அதற்கு ஆதரவாக அவர் கடனுறுதி சீட்டை எழுதி கொடுத்துள்ளார் அதற்கு சாட்சியாக அய்யாவு இருந்தார். மேற்படி கடனுறுதி சீட்டு வா.சா.ஆ.1. 07.10.2023 தேதிய வழக்கறிஞர் அறிவிப்பு வா.சா.ஆ.2. மேற்படி அறிவிப்பு சின்னையாவிற்கு சார்பு செய்யப்பட்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை வா.சா.ஆ.3. 12.12.2007 தேதியிட்ட சின்னையா மற்றும் அவரது சகோதரர்கள் பெரியசாமி,மலைச்சாமி ஆகியோர் பெயரில் உள்ள கிரைய பத்திரத்தின் கணினி பதிவிறக்க நகல் வா.சா.ஆ.4. எனது ஆதார் அட்டை ஒளிநகல் வா.சா.ஆ.5. (குறுக்கு விசாரணை வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது)

SAMUNDESWARIPRABHA

Digitally signed by SAMUNDESWARIPRABHA
Date: 2026.03.12 10:20:35 +0530

Sub Judge
Melur